Voice of Jagadguru
advaitam paramanandam
an e-magazine on advaita

# ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

## அருள் மொழிகள்

பகவான் வைகுண்டத்திலிருந்து கீழிறங்கிப் பலவிதமான அவதாரங்களை எடுத்துக் கொண்டது அவரைப் பொறுத்த வரையில் தேவையே இல்லையென்றாலும், சிரமப்படும் மக்களுக்கு நன்மை தரவேண்டும் என்ற ஒரே எண்ணத்துடன், கருணையினால் அவதாரம் எடுத்தார். பகவான் நமக்கு, மற்றவர் துன்புறும்போது அதனைத் தீர்க்கக் கூடிய சக்தியைக் கொடுத்திருக்கிறார். நாம் அந்தச் சக்தியை நமக்கு 'தயை' அல்லது கருணை இருந்தால்தான் உபயோகப்படுத்துவோம்.




தயை என்றால் என்ன? மற்றவர் துன்பப்படும்போது அதை நீக்க வேண்டும் என்று எண்ணம் தோன்றினால் அதுவே தயை. வேறு விதமாக இருந்தால் அவனை 'தயையில்லாதவன்' என்று சொல்வர். மனிதனுடைய சிறந்த பண்பு தயை, அப்படிப்பட்ட தயையாகிய கருணையை நம்மிடத்தே அதிகப் படுத்த வேண்டும். சிலருக்கு இயற்கையாகவே விசேஷமாகக் கருணை இருக்கும். சில பேருக்கு நல்ல மனிதர்களுடைய ஸஹவாசத்தினால் அவர்களைப் போல் தாமும் இருக்க வேண்டும் என்ற எண்ணம் உண்டானால் தயை உண்டாகும். அதனால் நாம் தயையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

—ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹா ஸ்வாமிகள்

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

## விதுர நீதி

वेस्सवैभूतप्रशमे निविष्ठः सत्यो मृदुर्मानकृच्छुध्दभावः ।
अतीव सज्ञायते ज्ञातिमध्ये महामणिर्जात्यइव प्रसन्नः ||५९||
வேஸ்ஸவைபூ4தப்ரஶமே நிவிஷ்ட2: ஸத்யோ ம்ரு’து3ர்மானக்ரு’ச்சு2த்4த3பா4வ: |
அதீவ ஸஜ்ஞாயதே ஜ்ஞாதிமத்4யே மஹாமணிர்ஜாத்யஇவ ப்ரஸன்ன: ||59||



நல்ல ஜாதிரத்தினம் போல் மனிதர்களுக்குள் தலைவனாக விளங்குகிறவனுக்கு நான் சொல்லும் குணங்கள் உண்டு. அவை எல்லோருடைய கஷ்டங்களையும் போக்கி யாவரும் ஒற்றுமையாக இருக்கும்படி செய்கிறவனும், உண்மை பேசுகிறவனும், மிருதுஸ்வபாவமுள்ளவனும், (யாவரும் தன்னை அண்டும்படியான குணமுள்ளவனும்) பெரியோர் களை நன்கு பூஜிக்கிறவனும், சுத்தமான எண்ணமுள்ளவனாயும் இருப்பவன்

प्रदायैषामुचितं तात राज्यं सुखीपुत्रैः सहितो मोदमानः ।
न देवानां नाबि चमानुषाणां भविष्यसि त्वं गर्हणीयो नरेन्द्र ||६०||
ப்ரதா3யைஷாமுசிதம்’ தாத ராஜ்யம்’ ஸுகீ2புத்ரை: ஸஹிதோ மோத3மான: |
ந தே3வானாம்’ நாபி3 சமானுஷாணாம்’ ப4விஷ்யஸி த்வம்’ க3ர்ஹணீயோ நரேந்த்3ர ||60

அண்ணா நான் சொல்வதைக் கேளும். நீர் தேவர்களுக்கோ, மனிதர்களுக்கோ நிந்திக்கத்தக்கவராக ஆக வேண்டாம் என்று நினைத்தால், இந்த பாண்டவர்களுக்கு சேர வேண்டிய ராஜ்யத்தைக் கொடுத்து உமது புத்திரர்களுடன் சுகமாகவும், சந்தோஷமாகவும் இருப்பீர்.

यः प्रमाणं न जानाति स्थानेवृध्दौ तथाक्षये ।
कोशे जनपदे दंण्डे न सराज्येऽवतिष्ठते ||६१||
ய: ப்ரமாணம்’ ந ஜானாதி ஸ்தா2னேவ்ரு’த்4தௌ3 ததா2க்ஷயே .
கோஶே ஜனபதே3 த3ம்’ண்டே3 ந ஸராஜ்யே(அ)வதிஷ்ட2தே ||61||

எவன் ஒருவனால் தன்னுடைய கோட்டை முதலான இருப்பிடத்திலும் பொருள் முதலியவைகளின் வளர்ச்சியிலும், அவைகளின் குறைவிலும் பொக்கிஷத்திலும், பட்டணத்திலும், சேனையிலும் அளவை அறியாதவனாக இருக்கிறானோ அவனால் இராஜ்யத்தில் நிலைத்திருக்க முடியாது.

(தொடரும்....)

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஆசார்யாளின் உபதேசங்கள்

(தக்ஷிணாம்னாய சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாசஸ்வாமிகள் அருளியது)

### பாபங்கள் பத்து வகை

இவ்வாறு மானஸிகமாக 3, வாசிகமாக 4, சரீரகமாக 3 என்று மொத்தம் 10 விதமான பாபங்களை மனிதன் செய்கின்றான். இந்தப் பத்து விதமான பாபங்களையும் ஒருவன் தவிர்த்தால், அவன் பவித்ரமான வாழ்க்கை வாழ முடியும். சாஸ்திரங்களிலிருந்து வேறு சில செய்திகளும் நமக்குக் கிடைக்கின்றன. புண்ணிய பாபங்களின் பலனை எல்லோரும் அனுபவிக்க வேண்டும் என்று சாஸ்திரத்திலே சொல்லப்பட்டிருக்கிறது அல்லவா? நாம் மானஸிகமாகச் செய்த பாபத்தை மானஸிகமாகவே அனுபவிப்போம். அதேபோல் வாக்கால் செய்த பாபத்தை வாக்காலேயே அனுபவிப்போம். சரீரத்தால் நாம் செய்த பாபத்தை சரீரத்தாலேயே அனுபவிப்போம்.

சிலர் என்னிடம், "சுவாமிகளே! எனக்குப் பணம், சொத்து எல்லாம் நிறைய இருக்கிறது. ஆனால், மனதில் மட்டும் நிம்மதி இல்லை" என்பார்கள். அதற்குக் காரணம் அவர்கள் போன ஜென்மத்தில் மானஸிகமாகச் செய்த பாபத்தின் பலன்தான். அதேபோல், வாக்கால் பாபம் செய்திருந்தால், அவர்கள் அதன் பலனாக ஊமையாகவோ, பேச்சு சரியாக வரப்பெறாமலோ பிறக்கின்றனர். அதேபோல், சரீரத்தாலே செய்யப்பட்ட பாபத்தின் பலனாக நாம் சரீரத்தாலே அனுபவிக்கக்கூடிய வியாதிகளுக்குக் கணக்கே இல்லை. புதிது புதிதாக இந்த காலங்களில் பல வியாதிகள் கண்டுபிடிக்கப்படுகின்றன. ஆயிரக்கணக்கில் வைத்தியர்கள் இருந்தும். வியாதிகள் மட்டும் நீங்குவதில்லை. அந்தக் காலத்திலெல்லாம் எல்லா வகையான வியாதிகளுக்கும் ஒரே மாதிரி படிப்பு படித்த வைத்தியர்கள்தான் உண்டு ஆனால் இப்பொழுதோ. கண்ணுக்குத் தனி, காதுக்குத் தனி, நெஞ்சுக்குத் தனி என்று வெவ்வேறு படிப்பு படித்த வைத்தியர்கள் பலர் இருக்கிறார்கள். இன்னும் கொஞ்ச நாளில், வலது கண்ணுக்கு ஒரு specialist, இடது கண்ணுக்கு ஒரு specialist என்று ஏற்பட்டாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை. இவ்வாறு உடலால் செய்யப்பட்ட பாபங்களுக்குப் பலன் பலவித நோய்களின் வடிவாக இருக்கிறது. பாபங்களில் 10 வகை உள்ளது போல் புண்ணியங்களிலும் 10 வகை உள்ளன. இன்னொருவனுக்குக் கொடுக்க வேண்டும் என்று மனதில் நினைப்பது மானஸிகமான புண்ணியம் ஆகும். மற்றவர்களுக்கு உபகாரம் செய்ய நினைப்பது இன்னொரு புண்ணியம். அதேபோல், சாஸ்திர சம்பந்தமான எண்ணங்கள் மனதில் இருப்பது ஒரு புண்ணியமாகும். சிலருக்கு சிறுவயது முதல் நல்ல எண்ணங்கள் இருப்பது உண்டு. இது அவர்களது மானஸிகமான



புண்ணியம், சில குழந்தைகள் சிறுவயதிலேயே கோயிலுக்குப் போக வேண்டும், பகவான் நாமாவை உச்சரிக்க வேண்டும், பூஜை பண்ண வேண்டும் என்னும் எண்ணங்கள் உடையவர்களாய் இருப்பர். அப்பா கோயிலுக்குக் கூட்டிக் கொண்டு போகாவிட்டால் சில குழந்தைகள் அழும், அப்பா வீட்டில் பூஜை பண்ணும் போது தானும் பூஜை பண்ண வேண்டும் என்று அழுது அடம்பிடிக்கும் சிறு குழந்தைகளும் உண்டு. இதற்குக் காரணம், அக்குழந்தைகள் செய்த புண்ணியமே ஆகும்.

இன்னொருவன் மனதிற்குத் துன்பம் உண்டாக்காமல் பேசுவதும், சத்தியத்தைப் பேசுவதும், இன்னொருவனுக்கு உபகாரம் செய்யக் கூடிய பேச்சுக்களைப் பேசுவதும் நாம் வாக்கினாலே செய்யும் புண்ணியங்கள் ஆகும். அதேபோல், இன்னொருவருக்கு உபகாரம் செய்வதும் மற்றவரை ஹிம்சிக்காமல் இருப்பதும் பிற பெண்டிர் விஷயத்திலே "தாய்" என்ற பாவனையுடன் நடந்து கொள்வதும் சரீரகமான புண்ணியங்கள்

சிலர் என்னிடம், "சுவாமிகளே! நான் சந்தோஷமாக இருக்கிறேன். என் மனதிலே எவ்விதமான கவலையும் இல்லை" என்று கூறுவதும் உண்டு. அதிகமான சொத்து அவர்களிடம் இல்லை என்பதும் எனக்குத் தெரியும். ஆனாலும் அவர்களுக்கு மனதில் எந்த அதிருப்தியும் இருக்காது. ஜென்மாந்திரத்தில் செய்த மானஸிகமான புண்ணியத்தின் பலனாக அவர்கள் மன நிம்மதியுடன் இருக்கிறார்கள். சிலர் எந்தவிதமான ரோகமுமில்லாத திடமான தேஹத்துடன் இருப்பர். அதற்கு அவர்கள் ஜென்மாந்திரத்தில் உடல் மூலம் செய்த புண்ணியங்களின் பலன்தான் காரணம். புண்ணியம், பாபம் என்பதைச் சாஸ்திரம் இவ்வாறு விஸ்தாரமாகச் சொல்லியிருக்கிறது. இதை நாம் நன்றாகத் தெரிந்து கொண்டால், நாம் நம்முடைய ஜீவனத்தில் பாபத்தை அனுஷ்டிக்காமல், புண்ணியத்தையே அனுஷ்டித்து ச்ரேயஸ்ஸை அடையலாம். உலகம் செழிப்பாக இருக்க வேண்டுமானால், தர்மம் ஒன்றுதான் வழி. ஆகவே, தார்மீகமான வாழ்க்கையை மனிதன் நடத்த வேண்டும் என்பதற்காக முன்னோர்கள் இவ்வளவு விஸ்தாரமாக தர்மத்தைப்பற்றி நமக்கு விளக்கம் கொடுத்துள்ளனர். ஆதிசங்கரபகவத்பாதாள் அவதாரம் செய்தது இந்த ஸநாதன தர்மத்தை உபதேசித்து எல்லோரையும் தார்மீகர்களாக ஆக்குவதற்குத்தான். ஸ்ரீ இராமாவதாரம், ஸ்ரீ கிருஷ்ணாவதாரம் முதலிய அவதாரங்கள் எல்லாமே தர்மத்தை நிலைநிறுத்துவதற்குத் தான் பகவான் எடுத்துக் கொண்டார். ஆகவே, நாம் எல்லோரும் தார்மீகர்களாக இருந்து நம்முடைய வாழ்க்கையை நடத்தி நற்கதி பெற வேண்டும்.

ஹர நம: பார்வதீ பதயே | ஹர ஹர மஹாதேவ ||
ஜானகீகாந்தஸ்மரணம் | ஜய ஜய ராம ராம ||

(தொடரும் .....)


Voice of Jagadguru
advaitam paramanandam
an e-magazine on advaita

ஸத் ஸம்ப்ரதாயம்
An Unit of the e magazine Voice of Jagadguru)

## என்றும் புதியவர்

### ஜகத்குரு சங்கராசார்யார் ஸ்ரீமத் அபிநவ வித்யா தீர்த்த மஹாஸ்வாமிகள்

### 2. பேரறிவு (மஹாப்ரக்ஞை)

### மஹாப்ரக்ஞை - கற்றறிந்த பண்டிதர்

“... (உங்கள் கடிதத்திலிருந்து) நீங்கள் வித்வத் சதஸில், 'சதகோடி' நூலின் உட்பொருளை விளக்கியது பற்றியும், உங்கள் மாணவனை 'அவச்சேதகதா” என்ற கோட்பாட்டைப்) பற்றி அவையில் பேச வைத்ததையும் அறிந்து மிகவும் அகமகிழ்ந்தேன். இவ்வாண்டு வித்வத் சதஸ் நல்ல முறையில் நடைபெறும் என்பதில் எந்த ஐயமும் இல்லை. பல பண்டிதர்கள் ஒரிடத்தில் கூடுவதினால் சாஸ்திரக் கல்வியில் ஆர்வம் பெருகும். பொதுவாகப், பல அறிஞர்கள் இந்த சதஸில் பங்கேற்பர். அங்கே குழுமியுள்ள பண்டிதர்கள் எல்லோரும் உங்கள் விரிவுரைகளினால் அளவற்ற ஆனந்தம் பெறுமாறு ஸ்ரீ சாரதா சந்த்ரமௌலீச்வரர் அனுக்ரஹம் செய்யட்டும் என்று ஆசீர்வதிக்கிறேன். " என்று கூறுகிறார். மேலும் சில கடிதங்களிலிருந்து, ஆசார்யாள் தர்க்க சாஸ்திரத்தில் பண்டிதர்கள் போற்றும் புலமையைப் பெற்றார் என்றும் அறிகிறோம்.


ஆசார்யாளின் கல்வியாற்றல் பற்றி அவருடைய குருவிற்கு இருந்த பற்றுறுதியைக் கீழ்க்காணும் நிகழ்வு பதிவு செய்கிறது:

“... ஆசார்யாளின் தர்க்க சாஸ்திரக் கல்வி முழுமையாக நிறைவேறாத சமயம், வட இந்தியாவிலிருந்து ஒரு பண்டிதர் சிருங்கேரிக்கு வந்தார்; தமக்கு அந்த சாஸ்திரத்தில் இருந்த சில ஐயங்களை ஸ்ரீமத் சந்த்ரசேகர பாரதீ மஹாஸ்வாமிகளிடம் தெரிவித்து அவற்றுக்கு விடை காண வேண்டும் என்பது அவர் நோக்கம். ஆனால் அவரோ, இந்த ஐயங்களை ஆசார்யாள் தீர்த்து வைப்பார் என்று அப்பண்டிதரிடம் கூறினார். இதைக் கேட்ட பண்டிதர் (தம்முடைய ஐயங்களைத் தீர்க்கும் அளவிற்கு ஆசார்யாளுக்குப் புலமை இருக்குமா என்று ஐயுற்று) சற்றே தயங்கி ஸ்ரீமத் சந்த்ரசேகர பாரதீ மஹாஸ்வாமிகளே தமது கேள்விகளுக்கு விடையளித்தால் நன்றாக இருக்கும் என்று கூறினார். அதற்கு ஸ்ரீமத் சந்த்ரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் அவரிடம், ‘முதலில் அவர் (ஆசார்யாள்) உங்களுக்கு விடை கூறட்டும். அதற்குப் பின்னும் உங்களுக்கு சந்தேகம் தெளியவில்லை என்றால் நான் விடை அளிக்கிறேன்' என்று கூறினார். இதற்கு மேலும் அந்த பண்டிதரால் ஏதும் சொல்ல முடியவில்லை ஆதலால், 'சரி, இந்த கற்றுக் குட்டி நமக்கு என்ன சொல்லப் போகிறார், பார்ப்போம்' என்ற

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

மனோபாவத்துடன் ஆசார்யாளிடம் சென்றார். ஆசார்யாள் அவருடைய ஐயங்களைக் கேட்டு, அதற்கு விடையாகப் பல நுட்பமான விஷயங்களைத் தங்குதடையின்றி மிகவும் எளிதாகக் கூறினார். பண்டிதரும் தம் பிழையுணர்ந்து ஆசார்யர்களிடம் மன்னிப்பு கோரிய பின் தம் வீடு திரும்பினார் ".



பிற்காலத்தில், அதாவது 1960களில் ஆசார்யாள் தமது யாத்திரைகளில் பல இடங்களில் வித்வத் சபைகளுக்குத் தலைமை தாங்கித் தமது புலமையை வெளிப்படுத்தியது பற்றிப் பல குறிப்புகள் கிடைக்கின்றன. "புலமிக் கவரைப் புலமை தெரிதல் புலமிக் கவர்க்கே புலனாம்" என்ற சொற்படி, இந்த சபைகளில் இந்தியாவில் பல பாகங்களிலிருந்தும் பண்டிதர்கள் பங்கெடுத்தனர் என்றும் இந்த குறிப்புகளிலிருந்து அறிகிறோம். விரிவஞ்சி எல்லாவற்றையும் கூறாது, அதில் ஓரிரண்டை மட்டும் பதிவு செய்வோம். முதலாவதாக 1966ம் ஆண்டு உஜ்ஜயினி நகரத்தில் நடந்த வித்வத் சபையைப் பற்றி "ஸ்ரீ சங்கர க்ருபா" பத்திரிகையில் வெளிவந்த குறிப்பு:

"... (செப்டம்பர் 19ம் தேதி) அன்றும் மறுநாளும் ஸ்ரீ மஹாஸந்நிதானம் (ஆசார்யாள்) அவர்கள் நிகழ்த்திய அருளுரையில் பொதுவாக சாஸ்திரங்களைப் பற்றியும், சிறப்பாக இரு கண்கள் போன்ற நியாய வியாகரண சாஸ்திரங்களைப் பற்றியும் மிக விரிவாக உபதேசித்தார்கள். 20ம் தேதி ஸ்ரீ மஹாஸந்நிதானம் அவர்கள் ஸத்ப்ரதிபக்ஷ லக்ஷணத்தில் பூர்வபக்ஷம் சொல்ல கொல்லப்புடி கோபால கிருஷ்ண மூர்த்தி அவர்கள் ஸித்தாந்தம் சொன்னார்கள். 21ம் தேதி வித்வான் கோபால கிருஷ்ண மூர்த்தி அவர்களும் பங்களூர் சங்கர மடம் பாடசாலை ப்ரின்ஸிபால் போளூர் ராமபட்டரும் இதே விஷயத்தைத் தொடர்ந்து பேசினார்கள். ஸ்ரீ மஹாஸந்நிதானம் அவர்கள் இதில் நுட்பமான பல விஷயங்களை விளக்கினார்கள். இவ்வாறே பிரதிதினமும் ந்யாயம், வியாகரணம், பூர்வ மீமாம்ஸா, வேதாந்தம் முதலான சாஸ்திரங்களில் வாக்யார்த்த விசாரம் நடைபெற்றது.

(தொடரும்.....) மிக்க நன்றி : Centre for Brahmavidya

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

## நீதி மஞ்ஜரீ

ஸ்ரீ ஞானானந்த பாரதீ ஸ்வாமிகள் இயற்றியது.

### அத்தியாயம் - 6



### உஷஸ்தி உபாக்யானம்

முன் ஒரு காலத்தில் குருதேசத்தில் தெய்வக்கோபத்தினால் அதிவிருஷ்டி ஏற்பட்டு இடிவிழுந்து ஸஸ்யாதிகளெல்லாம் நாசமடைந்து விட்டபடியால் ஜனங்கள் ஆஹாரத்திற்கு வழியில்லாமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் படி ஸம்பவித்தது. அப்பொழுது சக்கிரர் என்பவருடைய குமாரர் உஷஸ்தி என்கிற பிராஹ்மண சிரேஷ்டர் ஒருவர் தன் அதிபால்யமான பார்யையை அழைத்துக்கொண்டுபோய் ஒரு யானைப்பாகனுள்ள ஊரில் ஓரிடத்தில் தங்கியிருந்தார். அவர் பட்ட சிரமத்தைச் சொல்லிமுடியாது. இனிமேல் பிராணதாரணம் செய்வது ஸாத்தியமில்லையென்று தோன்றினவுடன் வீட்டை விட்டு எவ்வகையிலும் ஆஹாரம் ஸம்பாதிக்க வேண்டுமென்ற தீர்மானத்துடன் புறப்பட்டு போகும்போது அந்த யானைப்பாகன் கொள்ளு வேகவைத்து சாப்பிட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்தார். அவனிடம் வாங்கியாவது கொஞ்சம் சாப்பிடாதவரையில் ஜீவித்திருக்க முடியாதென்று நினைத்து, "எனக்குக் கொஞ்சம் கொடு" என்று யாசித்தார். அதற்கு அவன் "ஒரு நாளும் யாசிக்காத இந்த பிராஹ்மணர் நம்மை யாசிக்கிறார். நம்முடைய துரதிர்ஷ்டம், நாம் சாப்பிட்டுகொண்டிருக்கிற கொள்ளைத் தவிர வேறே எதுவும் இல்லை. இதிலிருந்தே கொடுப்போமானால், நான் சாப்பிட்ட மீதமாயிருப்பதால் அவர் பெற்றுக்கொள்ளவும் மாட்டார். வாங்கிக் கொள்ளுங்கள் என்று நான் சொல்வதும் அபசாரமாகும், என்ன செய்கிறது?" என்று மிகவும் வியாகூலத்தை அடைந்து "ஸ்வாமி, என் முன்னால் இதோ வைத்திருக்கிற பாத்திரத்தில் இருக்கும் கொள்ளைத்தவிர என்னிடம் வேறே இல்லையே, நான் தங்களுக்கு எதைக் கொடுப்பது?" என்றான். அதைக்கேட்டு உஷஸ்தி அவன் எண்ணத்தை அறிந்து, "இந்தக் கொள்ளிலிருந்தே எனக்குக்கொடு, பாதகமில்லை" என்று சொன்னார். அவன் கொஞ்சம் கொள்ளை எடுத்துக் கொடுத்தான். அவரும் சாப்பிட்டார். அவருக்கு தாஹமிருக்குமே என்று நினைத்து அந்த யானைப்பாகன், "ஸ்வாமி, இதோ தாஹத்திற்குக் கொஞ்சம் ஜலமிருக்கிறது" என்று தன் ஸமீபத்திலிருந்த பாத்திரத்தை நகற்றினான். அதற்கு அந்தப் பிராஹ்மணர் "அப்பா, இந்த ஜலம் நீ

பானம் செய்த மிகுதி. ஆகையால் நான் உபயோகப்படுத்தக் கூடாது. எனக்கு வேண்டாம்" என்று சொன்னார். யானைப்பாகன் உடனே "ஸ்வாமி, இப்பொழுது நான் கொடுத்த கொள்ளும் நான் சாப்பிட்ட மிகுதி தானே, அதை மாத்திரம் ஸ்வீகரித்தீர்கள். ஜலத்தை ஸ்வீகரிக்க மாட்டேன் என்கிறீர்கள். அதற்கும் இதற்கும் என்ன வித்தியாஸம் என்று எனக்குத் தெரியவில்லை" என்று சொல்ல, 'நான் இந்த கொள்ளை உன்னிடம் வாங்கி உபயோகப்படுத்தாமல் போனால், பிராணன் போயிருக்கும். அதனால் வாங்கிக் கொண்டேன். இன்னம் கொஞ்சம் தூரம் போனால் சுத்தமான ஜலம் கிடைக்கும். இந்தக் கொள்ளைச் சாப்பிட்டபடியால் அதுவரை போய் ஜலத்தை எடுத்துகொள்ள சரீரத்தில் சக்தியேற்பட்டிருக்கிறது. அப்படி இருக்கும்போது நான் உன் ஜலத்தைப்பானம் பண்ணினேனானால் எனக்கு தோஷமுண்டு. ஆகையால்தான் வேண்டாம் என்று சொன்னேன்" என்று உஷஸ்தி மறுமொழி சொன்னார்.

பிறகு, தான் சாப்பிட்டதுபோக மிகுதியாயுள்ள கொள்ளைத் தன் பத்னியிடம் கொடுத்தார். அவளுக்குப் பசியில்லாததினாலும், கொடுத்த கொள்ளை வீணாக விட்டெறிந்து விட ஸாதாரணமாகவே பெண்டுகளுக்கு மனது வராததினாலும், இன்னொரு வேளைக்கு அவசியம் ஏற்பட்டால் உபயோகப்படுத்திக் கொள்ளலாமென்று நினைத்து அதை வாங்கி பத்திரமாக வைத்துக்கொண்டாள். அப்படியே கொஞ்சதூரம் வழி நடந்துபோய் இரவில் ஓரிடத்தில் படுத்திருந்தார்கள். பொழுது விடிந்தவுடன் மறுபடியும் அந்த பிராஹ்மணருக்குத் தாங்க முடியாத பசி ஏற்பட்டது. தனக்குள்ளேயே மிருதுவாய் சொல்லிக் கொண்டார், "இப்பொழுது ஏதாவது கொஞ்சம் ஆஹாரம் கிடைக்கும் விஷயத்தில் அதைச் சாப்பிட்டு அதன் பலத்தை வைத்துகொண்டு கொஞ்சதூரம் போனால், அங்கே ஒரு ராஜா யாகம் செய்கிறார், அவர் என்னைக் கண்டால் எல்லா ரித்விக் ஸ்தானத்திற்கும் என்னையே வரிப்பார், ஏதாவது தனமும் கொடுப்பார், அதை வைத்துக்கொண்டு காலக்ஷேபம் செய்யலாம். ஆனால் இங்கிருந்து ஒரு அடிகூட நகருவதற்கு சக்தியில்லையே. மிகவும் பலஹீனமாயிருக்கிறதே என்ன செய்கிறது?" இவர் இவ்விதம் சொல்லிக்கொண்ட வார்த்தையைக் கேட்ட அவர் பத்னீ "தாங்கள் நேற்று என்னிடம் கொடுத்திருந்த கொள்ளு இதோ இருக்கிறது" என்று சொல்லி அதைக் கொடுத்தாள். அதை வாங்கிச் சாப்பிட்டுக் கொஞ்சம் ஆசுவாஸம் பண்ணிக்கொண்டு மெள்ள மெள்ள ராஜா யாகம் செய்யும் யாகசாலையை அடைந்தார். (தொடரும் ...) மிக்க நன்றி : ஸ்ரீ ஞானானந்த பாரதீ க்ரந்த ப்ரகாசன ஸமிதி

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

# ||श्रीशारदास्तोत्रम्||

## श्रीशृङ्गाद्रौ श्रीशारदानवरात्रोत्सवसमये

## ஸ்ரீஶாரதா³ஸ்தோத்ரம்

## (ஸ்ரீ சிருங்க கிரியில் சாரதாநவராத்திரியின்போது)

(ஸ்ரீ சிருங்ககிரி ஸ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ ந்ருஸிம்ஹ பாரதீ மஹாஸ்வாமிகள் இயற்றியது)

मुक्ताहारमिमं जगज्जननि ते शुभ्राहिबुद्धचा किमु
ग्रीवास्थं हययमग्रहीद्भुजगभुग्भोक्तुं ततो लब्धधीः ।
नायं सर्प इति स्वमोहमधुनापहनोतुमेषात्यजत्
नैवालङ्कृतिलक्ष्यतः परमहो धत्ते बुधः पूर्ववत् ||३२||

முக்தாஹாரமிமம்’ ஜக³ஜ்ஜனனி தே ஶுப்⁴ராஹிபு³த்³த⁴சா கிமு
க்³ரீவாஸ்த²ம்’ ஹ்யயமக்³ரஹீத்³பு⁴ஜக³பு⁴க்³போ⁴க்தும்’ ததோ லப்³த⁴தீ⁴: |
நாயம்’ ஸர்ப இதி ஸ்வமோஹமது⁴னாபஹ்னோதுமேஷாத்யஜத்
நைவாலங்ரு’திலக்ஷ்யத: பரமஹோ த⁴த்தே பு³த⁴: பூர்வவத் ||32||

உலகின் தாயே ! கருடன் உன் கழுத்திலுள்ள முத்தாரத்தை வெண்ணிறப் பாம்பு என நினைத்து அதனை விழுங்குவதற்காகப் பிடிக்கமுன் வந்தவன், இது பாம்பல்ல என உணர்ந்தவனாக தனது மனக்கலக்கத்தை மறைக்க அதனை விட்டான். முத்தாரத்தைப் பறிப்பதற்கல்ல என அறிந்து அதை அங்கேயே முன் போல் இருக்கச் செய்தான்.

आद्या मत्स्यमयी तनुर्मधुरिपोः कौर्मं द्वितीयं वपुः
तद्युग्मं त्वमिहाम्ब नेत्रपदयोर्व्याजेन धत्से यतः ।
तस्माच्चक्रयुगं तवोरसि कुचव्याजेन भात्यम्बिके
तस्मादेव खगेश्वरश्च सततं त्वां सेवते मोदतः ||३३||

ஆத்³யா மத்ஸ்யமயீ தனுர்மது⁴ரிபோ: கௌர்மம்’ த்³விதீயம்’ வபு:
தத்³யுக்³மம்’ த்வமிஹாம்ப³ நேத்ரபத³யோர்வ்யாஜேன த⁴த்ஸே யத: .
தஸ்மாச்சக்ரயுக³ம்’ தவோரஸி குசவ்யாஜேன பா⁴த்யம்பி³கே
தஸ்மாதே³வ க²கே³ஶ்வரஶ்ச ஸததம்’ த்வாம்’ ஸேவதே மோத³த: ||33||

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

அன்புள்ள தாயே ! மது என்ற அஸுரனின் எதிரியான விஷ்ணுவிற்கு முதல் உருவம் மீனானது, இரண்டாவது ஆமையானது. அவ்விரண்டையும் உன் கண்களாகவும் புறங்காலாகவும் கொண்டாய். அவரது இரு சக்ரங்களை மார்பகம் என்ற பெயரில் கொண்டுள்ளாய். அதனால் (அவரது வாகனமான) கருடன் உனக்கு (வாஹனமாக) பணிவிடை புரிகிறான்.



विष्णौ वीक्ष्य जडाधिवासमथ च स्वामित्रशायित्वम-
प्यण्डोद्भूतपतिर्विहाय तमिमं
विज्ञानरूपामयम्।
त्वामेवाद्य निषेवते खलु मुदा वाग्देवि युक्तं
च तत्
को वा शत्रुसहासिकां हि सहते लोकेषु
विद्वज्जनः ||३४||

விஷ்ணௌ வீக்ஷ்ய
ஜடா³தி⁴வாஸமத² ச
ஸ்வாமித்ரஶாயித்வம-
ப்யண்டோ³த்³பூ⁴தபதிர்விஹாய
தமிமம்' விஜ்ஞானரூபாமயம் |
த்வாமேவாத்³ய நிஷேவதே க²லு
முதா³ வாக்³தே³வி யுக்தம்' ச தத்
கோ வா ஶத்ருஸஹாஸிகாம்' ஹி
ஸஹதே லோகேஷு வித்³வஜ்ஜன:
||34||

வாக்கின்தேவி ! உலகில் அறிவுள்ளவன் தன் எதிரியுடன் சேர்ந்து அமர விரும்பமாட்டான். முட்டையிலிருந்து பிறந்த பறவையான இந்த கருடன், விஷ்ணுவிடம் ஜட(ல)த்தில் வாஸத்தையும் தன் எதிரியான ஆதிசேஷன்மீது படுத்திருப்பதையும் கண்டு, அவரை விட்டுப் பேரறிவே வடிவான உன்னை இப்போது மகிழ்ச்சியுடன் உபசரிக்கிறான். இது உசிதம் தானே !

(தொடரும் ...)

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

# ஸ்ரீமத் அத்யாத்ம ராமாயணம்

## பாலகாண்டம்

முதலாவது ஸர்கம்

ஸ்ரீராம ஹ்ருதயம்

ஸ்ரீமகாதேவர் சொன்னது

ஹே பார்வதி! இது சம்பந்தமாக, மிகவும் ரகசியமானதும் மற்றவர்கள் அறியாததுமான ஒரு சம்பவத்தை உனக்குச் சொல்லப் போகிறேன். சீதை-ராமன-ஆஞ்ஜநேயன் ஆகியோரிடையே, மோட்சத்தை அடைவதற்கான வழி குறித்து நடந்த உடையாடல் இது. இதை நீ கவனமாக கேட்பாயாக. முன்னர் ஒரு திரேதா யுகத்தில் நடந்த ராமாவதாரத்தில், சிறந்த யுத்த வீரரான ஸ்ரீ ராமன், தேவர்களுக்கு எதிரியாய் இருந்த ராவணனை அவனுடைய புதல்வர்கள், சேனைதலைவர்கள் மற்றும் அவர்களுடைய அகண்ட சேனைகள், உற்றார் உறவினர்களுடன் அனைவரையும் கொன்றொழித்தார். சீதை, சுக்ரீவன், லட்சுமணனுடன் ஹனுமான் முதலிய வானர வீரர்கள் புடைசூழ, அயோத்திமா நகரை வந்து அடைந்தார். ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்திக்குபட்டாபிஷேகம் செய்விக்கப்பட்டு, வசிஷ்டர் முதலான மகாத்மாக்கள் ஒன்றாக சூழ்ந்திருக்க, கோடி சூர்யப் பிரகாசத்துடன் சிம்மாசனத்தில் வீற்றிருந்தார். அப்போது, அவருக்கு முழுமையான தன் சேவை செய்துவிட்டு. அதற்குப் பிரதிபலனை எதையும் எதிர்பாராதவரும், ஞானத்தை மட்டுமே விரும்பும் பேரறிவாளனுமா ஹனுமான், தன் எதிரில் கைகூப்பியவாறு நின்று கொண்டிருப்பதைப் புன்னகையோடு ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தி பார்த்தார்.

ஸ்ரீராமசந்திர மூர்த்தி சீதாப்பிராட்டியைப் பார்த்து, 'இவன் குறைகளற்றவன்; ஞானம் பெறுவதற்குத் தகுதியுடையவன்; எப்போதும் நம் இருவரிடமும் மிகுந்த பக்தியோடு இருப்பவன். ஆகவே, இந்த ஹனுமானுக்கு நீ உனது வாக்கினால் தத்துவோபதேசம் செய்வாயாக' என்றார் கூறி அருளினார். உலக மக்களை மயக்கமுறச் செய்யும் மாயாஸ்வரூபிணியும், ஜனக்குமாரியும், ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தியின் பத்தினியும் ஆன சீதாப்பிராட்டி, “அவ்விதமே உங்கள் சித்தம் போல் செய்கிறேன்” என்று சொல்லிவிட்டு, அவர்கள் முன் அடிபணிந்து நிற்கும் ஆஞ்சநேயருக்கு ஸ்ரீராமசந்திரப் பிரபுவின் உண்மையான தத்துவத்தை எடுத்துக் கூறலானாள்.

ஹே ஆஞ்சநேயா ! “ஸ்ரீ ராமனே பரம்பொருள்; சச்சிதானந்த வடிவினர்; இரண்டாவது இல்லாத ஒரே வஸ்து: எவ்வித உபாதிகளும் இல்லாதவர்; 'ஸத்'

என்று குறிப்பிடத்தக்க ஒரே ஒருவர்: புலன்களுக்குப் புலனாகாதவர். ஆனந்த வடிவினர்; மாசற்றவர்; சாந்தமானவர்; விகாரமற்றவர்; பிரகிருதியின் குணங்களால் ஒட்டப்படாதவர்; எங்கும் நிறைந்தவர்; குற்றம் குறைகளற்ற ஒளிமயமான பரமாத்மா.

நான் இவ்வுலகங்களின் தோற்றம் - இருப்பு - மறைவுக்குக் காரணமான மூலப்பிரகிருதி, என்பதை நீ நன்றாக தெரிந்து கொள். ஸ்ரீராமனுடைய சந்நிதி விசேஷத்தால் தான் சோம்பலில்லாமல், இவைகள் எல்லாவற்றையும் நான் சிருஷ்டிக்கிறேன். ஆயினும் அவருடைய சந்நிதியில் என்னால் படைக்கப்பட்ட எல்லாவற்றையும் அறிவில்லாத இந்த மக்கள், அவரே அதைச் செய்ததாக அவர் மேல் ஏற்றி வைத்துப் பேசுகிறார்கள்.

அயோத்தி நகரில், மிகவும் புகழ்பெற்ற ரகுகுலத்தில் பிறப்பு, விசுவாமித்திரருக்கு உதவியாக யாகசம்ரட்சணம்; பிறகு, சாபத்திலிருந்து அஹல்யையை விடுவித்தல்; பரமேசுவரனுடைய வில்லை ஒடித்தல்; விவாகத்தில் என் கரங்களைப் பற்றுதல்; பின், பரசுராமனின் கர்வத்தை அடக்குதல்; அயோத்திமாநகரில் என்னுடன் பன்னிரெண்டு ஆண்டுக்காலம் வாழ்ந்தது; தண்டகாரண்யம் சென்றது; விராதனை வதம் செய்தது; மாயமானாக வந்த மாரீசனைக் கொன்றது; மாயா சீதை கவர்ந்து செல்லப்படுவது; ஜடாயுவுக்கு மோட்சம் வழங்கியது; அவ்வாறே, கபந்தனுக்கும் நல்லுலகம் கிடைக்கச் செய்தது; சபரியால் பூஜிக்கப்படுதல், அடுத்து, சுக்ரீவனுடன் நட்பு; அதைத் தொடர்ந்து வாலியின் வதம்; பின்னர், சீதையைத் தேடி அலைதல்; கடலில் அணை கட்டி, இலங்கையின் மேல் படையெடுத்தல்; கொடியவனான ராவணனை, புதல்வர்களோடும், உறவு மற்றும் நண்பர்களோடும் கூட போர்க்களத்தில் மாய்த்தல்; அதன் பின் விபீஷணனுக்கு ஆட்சியுரிமையும், என்னுடன், புஷ்பக விமானத்தில் ஏறி அயோத்திக்கு வருகை தருதலும் நடந்தது. பிறகு, மன்னராக ராமனுக்குப் பட்டாபிஷேகம் இவை எல்லாம் என்னாலேயே செய்யப்பட்டன என்றாலும், நிர்விகாரமானவரும் எல்லாருடைய ஆத்மாவாக விளங்குபவருமான ஸ்ரீராமன் மேல் ஏற்றி வைத்து ஸ்ரீராமப் பிரபுவே செய்ததாகக் கூறுகிறார்கள்!

(தொடரும்...)

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்,
ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்
அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்